8082849

# FIRST INFORMATION REPORT

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District / மாவட்டம் : மதுரை    PS / காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு    Year / ஆண்டு : 2024    FIR No. / மு.த.அ. எண் : 03/24    Date / நாள் : 30-4-2024

2. (i) Act சட்டம்: PC Act 1988 as    Sections பிரிவுகள்: 7 of PC Act 1988
(ii) Act சட்டம்: amended by PC (amended)    Sections பிரிவுகள்: as amended by PC
(iii) Act சட்டம்: Act 2018    Sections பிரிவுகள்: (amended) Act 2018
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்    Date from : நாள் முதல்    Date to : நாள் வரை
1) 27-2-2024 at 10.30 AM
2) 4-3-2024 at 05.00 PM
3) 25-4-2024 at 11.30 AM
4) 27-04-2024 at 11.00 AM

Time Period : நேர அளவு    Time from : நேரம் முதல்    Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30-4-2024    Time நேரம் : 08.30 hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 30-4-2024    Time நேரம் : 09.15 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : நடக்கச் செய்யப்பட்ட மனு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : சுமார் 1 கி.மி. தெற்கு வைகோச இல்லம்,

Beat Number : முறைக் காவல் எண்    (b) Address : முகவரி : பொதுப்பணித்துறை வளாகம், கோகலே ரோடு, மதுரை

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : S. தமீர் காசிம்    (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் : சிராஜுதீன்

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு : 32/24    (d) Nationality : நாட்டினம் : இந்தியன்    (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள்    Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் : ஏற்றுமதி    (g) Address : முகவரி : பிளாட் எண் 2, SEV நகர், திருப்பதி தேவஸ்தானம் அருகில், நாராயணபுரம், மதுரை-14

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) திரு. மாயகிருஷ்ணன், உதவி பொறியாளர், நீர் வளத்துறை, நீர் பாசன பிரிவு II மதுரை. 2) திரு. தியாகராஜன் நீர் பாசன ஆய்வாளர், நீர் வளத்துறை, மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) : —
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது -

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Shamul 30-4-2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

N. Bharathi 30-4-24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
30-4-2024 / 09.45 hrs.

Name: பெயர் N. Bharathi Priya
Rank: நிலை Inspector of Police
VEAC, Madurai

அய்யா, பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 30.04.2024-ஆம் தேதி காலை சுமார் 07.45 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை நாராயணபுரம் S.E.V. நகர் திருப்பதி தேவஸ்தானம் அருகில், பிளாட் எண்.2 என்ற முகவரியில் வசிக்கும் சிராஜுதின் என்பவரது மகன் சமீர்காசிம் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் S. சமீர்காசிம், த/பெ. சிராஜுதின், பிளாட் எண். 2, S.E.V. நகர், திருப்பதி தேவஸ்தானம் அருகில், நாராயணபுரம், மதுரை - 14. பெறுநர் காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. அய்யா, நான் மதுரை S.E.V. நகரில் எனது பெற்றோருடன் வசித்து வருகின்றேன். நான் M.Sc., படித்து விட்டு ஜவுளி ஏற்றுமதி இறக்குமதி தொழில் செய்து வருகின்றேன். எனது அம்மா ஷர்மிளா சிராஜ் அஹானா மருத்துவமனையில் உளவியலாளராக பணிசெய்து வருகின்றார். மதுரை மாவட்டம் வடக்கு தாலுகா மதுரை மாநகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு 15 தல்லாகுளம் வருவாய் கிராமம் தபால்தந்தி நகரில் டவுன் சர்வே எண். 124 உட்பிரிவு 2-ல் 80 ஏர்ஸ் 7 சதுர மீட்டர் அளவிலான காலியிடம் எங்களுடைய பூர்வீக இடமாகும். அந்த இடமானது எனது தாய் ஷர்மிளா, பாட்டி அபிதா பேகம், மாமா ரியாஸ் அகமது, சித்தி சபிரா பர்வீன் மற்றும் சித்தி ஷமினா பர்வீன் ஆகிய ஐந்து பேர் பெயர்களில் கூட்டு பட்டாவாக உள்ளது. அந்த இடத்தை எனது தாயார் ஷர்மிளா உட்பட ஐந்து பேர்களும் பாகப்பிரிவினை செய்து உபயோகப்படுத்தி கொள்ள முடிவு செய்தார்கள். அதன்படி 12.04.2023-ம் தேதியன்று, எனது தாயார் திருமதி. ஷர்மிளா, பாட்டி சபீதா பேகம், மாமா ரியாஸ் அகமது ஆகியோர் ஆவண எண்.1029/2023-ன் படி பூர்வீக சொத்து டவுன் சர்வே எண். 124/2-ல் கண்ட 80 ஏர்ஸ் 7 சதுர மீட்டரில் உள்ளதில் ஐந்தில் மூன்று பங்கு செட்டில்மெண்ட் ஆக எனது சித்தி ஷமினா பர்வீன் மற்றும் சபிரா பர்வீன் ஆகியோர்களுக்கு வழங்கப்பட்டது. மேற்படி சர்வே புத்தகத்தில் உள்ள எங்களுடைய நிலம் மற்றும் மேலே குறிப்பிட்ட ஆவணத்தின் படி ஐந்தில் மூன்று பங்கு நிலத்தில் சிறு ஓடை செல்கிறது. எனது சித்திகள் பாண்டிச்சேரி மற்றும் கத்தாரில் இருப்பதால் அந்த ஓடை சம்பந்தமாக எனது அம்மாவிடம் பாதுகாப்பு நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொண்டார்கள். மேற்படி ஓடை மதுரை வடக்கு வட்டம் நாராயணபுரம் கண்மாய் வரத்து கால்வாய் எங்களுக்கு சொந்தமான பட்டா நிலத்திற்கு மையப்பகுதி வழியாக சென்று நாகனாகுளம் கண்மாய்க்கு செல்கிறது. அந்த கால்வாயில், தண்ணீர் அதிகமாக வரும் காலங்களில் எங்கள் இடத்திற்குள்ளும் அதிகமாக தண்ணீர் கடந்து செல்லும். அதில் அருகில் உள்ள வீட்டுகளில் உள்ள கழிவு நீரும் சேர்ந்து செல்லும். அது எங்களுக்கு தொந்தரவாக இருந்ததால், அதனை சரிசெய்ய எனது தாயார் என்னிடம் கேட்டுக்கொண்டார். அதன் காரணமாக, கடந்த 15.02.2024-ம் தேதியன்று எனது தாயார் ஷர்மிளா எனது பெயரில் அவர்கள் கைப்பட ஒரு மனுவை தயாரித்து அதில் என்னிடம்

கையொப்பம் பெற்று அதனை தபால் மூலமாக Assistant Engineer, PWD (WRD Department), PWD Office, Chinna Chokkikulam, Madurai, Tamil Nadu – 625 002 என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கும் படி கேட்டுக்கொண்டார். நான், அத்தபாலை அவர் கூறிய முகவரிக்கு அனுப்பிவைத்தேன். மறுநாள், 16.02.2024-ம் தேதி மாலையில், நான் நேரடியாக மதுரை கோகலே ரோட்டில் உள்ள பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் உள்ள வைகாசி இல்லத்திற்கு சென்று அங்கிருந்த AE திரு. மாயகிருஷ்ணன் அவர்களை சந்தித்து, எங்களது மனு சம்பந்தமாக பேசினேன். அவர் கழிவு நீர் சம்பந்தமாக தன்னால் எதுவும் செய்யமுடியாது என்றும், அதற்கு பதிலாக உங்களது இடத்தில் ஓடும் ஓடையை பைப் மூலமாக முறைப்படுத்தி உங்கள் இடத்தை கடந்து செல்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என யோசனை தெரிவித்தார். மேலும், அவர் ஓரிரு நாட்களில், அவரே நேரடியாக வந்து இடத்தை பார்வையிட்டு ஏற்பாடுகள் செய்கின்றேன் என கூறினார். அந்த சமயத்தில், அவரது செல்போன் எண். 94435 94621-யையும் வழங்கினார். அவர் கூறியபடி, எங்கள் இடத்திற்கு பார்வையிட வராத காரரணத்தினால், கடந்த 21.02.2024-ம் தேதி காலையில் அவருக்கு எனது மொபைல் நம்பர் 73737 99090-லிருந்து அவரது செல்போனிற்கு போன் செய்தேன். அவர் எடுக்கவில்லை. அதன்பின்னர், அன்றைய தினம் பகல் சுமார் 12.30 மணியளவில், அவர் அவரது செல்போனிலிருந்து எனது செல்போனிற்கு தொடர்பு கொண்டு, அவர் தற்போது எங்கள் இடத்தில் இருப்பதாகவும், என்னை உடனடியாக எங்கள் இடத்திற்கு வரும்படி கூறினார். உடனே, நான் எங்கள் இடத்திற்கு சென்றேன். அப்போது அங்கு, திரு. மாயகிருஷ்ணன் மற்றும் இரண்டு நபர்களுடன் எங்களது இடத்தில் இருந்தார். அவர், எங்களது இடத்தை பார்வையிட்டு, இப்பிரச்சனையை சரிசெய்வதற்கு பாலம் அமைத்தோ அல்லது சுமார் 165 மீட்டர் நீளத்திற்கு சுமார் 3 அடி விட்டம் அளவுள்ள பைப் பதித்து வரும் நீரை உங்களது இடத்தை கடந்து செல்வதற்கு ஏற்பாடு செய்யலாம் என கூறிவிட்டு, இது சம்பந்தமாக அவரை அவரது அலுவலகத்தில் வந்து சந்தியுங்கள் என கூறிவிட்டு சென்றார். இத்தகவல்களை நான் எனது தாயாரிடம் தெரிவித்தேன். அவர் பைப் போட்டு விடலாம் என்றார். மேலும், அவர், இது சம்பந்தமாக என்னை மாயகிருஷ்ணன் அவர்களை சந்தித்து நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொண்டார். அதன் காரணமாக, கடந்த 27.02.2024-ம் தேதி காலை சுமார் 10.30 மணியளவில், நான் மதுரை பொதுப்பணித்துறை அலுவலகத்திற்கு சென்று திரு. மாயகிருஷ்ணன் அவர்களை வைகாசி இல்லத்தில் சந்தித்தேன். அந்த சமயத்தில், திரு. மாயகிருஷ்ணன் அவர்கள் அவருடன் இருந்த Irrigation Inspector திரு. தியாகராஜன் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தினார். அவர்கள் இருவரும் இது சம்பந்தமாக பேசி, எங்களது இடத்தில் பைப் அமைத்து, நீரை கடந்து செல்வதற்கு ஏற்பாடு செய்வதுதான் சிறந்த வழி என்று கூறினார்கள். மேலும், மாயகிருஷ்ணன் அவர்கள் Map தயார் செய்வதற்கும், பைப் லைன் பதித்து கொள்ள அனுமதி வழங்குவதற்கும் ரூ.5,00,000/- தனியாக தர வேண்டும் என்று கேட்டார். அதற்கு நான் இது அரசுக்கு செலுத்த வேண்டிய பணமா? என்று கேட்டேன். அதற்கு AE மாயகிருஷ்ணன் அவர்கள் இல்லை. அது

உங்களுக்கான Map மற்றும் முறையாக பைப் லைன் பதித்து தண்ணீரை வெளியேற்ற அனுமதி வழங்க ஏற்பாடு செய்வதற்கு எங்களுக்கு தரவேண்டிய பணம் என்று தெரிவித்தார். உடனே உடனிருந்த தியாகராஜன் அவர்களும் AE சொல்வது போல் ரூ.5,00,000/- கொடுத்து விடுங்கள் உங்களுக்கு பைப் பதிவதற்கான அனுமதி ஆணையை பெற AE ஏற்பாடு செய்வார் என கூறினார். அப்பொழுது திரு. தியாகராஜன் அவர்கள்அவரது செல்போன் எண். 79040 36186-யை எனக்கு வழங்கினார். உடனே நான் இது சம்மந்தமாக எனது தாயாருடன் கலந்து பேசிவிட்டு வருகிறேன் என்று தெரிவித்து விட்டு வந்துவிட்டேன். இத்தகவலை எனது தாயாரிடம் தெரிவித்தேன். அவர் லஞ்சமாக பணம் கொடுத்து பைப் லைன் பதிக்க அனுமதி பெற விரும்பவில்லை. ஆனால் கடந்த 04.03.2024-ம் தேதி மதியம் சுமார் 01.00 மணியளவில் திரு.தியாகராஜன் அவர்கள் எனது செல்போனில் தொடர்பு கொண்டு, அவர் அன்றைய தினம் மாலையில் எங்களது வீட்டிற்கு, பைப் பதிப்பது சம்பந்தமாக வருவதாகவும் தெரிவித்தார். அதன்படி, அன்று மாலை சுமார் 05.00 மணிக்கு திரு.தியாகராஜன் எங்கள் வீட்டிற்கு வந்தார். அப்பொழுது அவர் என்னிடம், திரு. மாயகிருஷ்ணன் தான் அவரைஅனுப்பி வைத்ததாகவும், மேலும் எங்களது இடத்தில் பைப் பதிப்பதற்கு குறைவாகத்தான் ரூ.5,00,000/- கேட்டுள்ளோம், வேறு யாரலும் இப்பணியை செய்யமுடியாது. எனவே சீக்கிரம் பணத்தினை ஏற்பாடு செய்து கொடுங்கள் என்றும், மேலும் அவர் அதற்கான மேப் தயார் செய்துவிடுகிறேன் என தெரிவித்து விட்டு, எங்கள் இடத்தின் செட்டில்மெண்டு பத்திர நகல், வில்லங்க சான்றிதழ் மற்றும் பட்டாநகல் ஆகியவற்றை கேட்டு பெற்று கொண்டு சென்றுவிட்டார். இத்தகவல்களை எனது தாயாரிடம் தெரிவித்தேன். அவர்கள் பணம் கொடுக்க விரும்பவில்லை. பின்னர், கடந்த 26.03.2024-ம் தேதி, எனது அம்மா ஷர்மிளா சிராஜ், திரு. மாயகிருஷ்ணன் அலுவலக உயரதிகாரியான செயற் பொறியாளர் அவர்களுக்கு இது சம்பந்தமாக ஒரு மனு ஒன்றை தயார் செய்து அதனை என்னிடம் தபாலில் அனுப்பிவைக்கும்படி சொன்னதின் பேரில், நான் அதனை The Executive Engineer, PWD (WRD), PWD Office, Chinna Chokkikulam, Madurai – 625002 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தேன். அதில், எங்களது இடத்தில் ஓடும் ஓடையில், அந்தபகுதியில் உள்ளவர்கள் தங்களது சாக்கடை தண்ணீரை சேர்த்து விடுகிறார்கள் என்றும், அந்த ஓடையானது வருவாய் துறையின் மேப் மற்றும் FMB Sketch களில் இல்லை என்றும், எனவே அதனை மூடுவதற்கு அனுமதி தரும்படி கேட்டிருந்தார். அந்த தபால், கடந்த 28.03.2024-ம் தேதியன்று எனது முகவரிக்கே தபால் துறையால் திருப்பி கொடுக்கப்பட்டது. அதில், 27.03.2024, Refused, எந்த பிரிவிற்குரிய Ex. Engineer பதவி அலுவலர் என எதுவும் தெளிவாக குறிப்பிடாத காரணத்தினால் திருப்பப்படுகிறது என குறிப்பிடப்பட்டு அதன் கீழ் கையெழுத்து மற்றும் 27.03.2024 என தேதி குறிப்பிடப்பட்டிருந்தது. எனவே, மீண்டும் அம்மனுவை கடந்த 01.04.2024-ம் தேதியன்று Superintending Engineer, PWD, WRO, Ground Water Division, Madurai - 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைத்தேன். அதற்கு பதில் ஐந்து நாட்கள் கழித்து எனக்கு தபாலில் கிடைக்கப் பெற்றது. அதில், அனுப்புநர் : பொறி. இரா. ஜோயல் சதீஷ், எம்.இ.,

கண்காணிப்புப்பொறியாளர், நீ.வ.து., நிலநீர் வட்டம், மதுரை அவர்கள் கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., பெரியாறு வைகை வடிநில வட்டம், தல்லாகுளம், மதுரை அவர்களுக்கு எங்களது மனுவின் மீது நடவடிக்கை எடுக்க அனுப்பிவைத்திருப்பதாக தெரிவித்திருந்தார். அதன்படி கண்காணிப்புப் பொறியாளர், நீ.வ.து., பெரியாறு வைகை வடிநில வட்டம், தல்லாகுளம், மதுரை அவர்கள் அலுவலகம் சென்று பார்த்த போது கண்காணிப்பு பொறியாளரின் நேர்முக உதவியாளர் AE மாயகிருஷ்ணனை சந்திக்கும்படி அறிவுறித்தியதால் நான் கடந்த 25.04.2024-ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் நான் திரு. மாயகிருஷ்ணன் அவர்களை மதுரை பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் வைகாசி இல்லத்தில் நேரில் சந்தித்தேன். அந்தசமயத்தில் திரு. தியாகராஜனும் உடனிருந்தார். மேலும் திரு. மாயகிருஷ்ணன் அவர்கள்தான் ஏற்கனவே சொன்ன ரூ.5,00,000/-த்தை கொடுத்து விட்டால் உடனே வேலையை முடித்து விடலாம் என்று சொன்னார். நான் இது சம்மந்தமாக எனது தாயாரிடம் பேசிவிட்டு வருகிறேன் என்றேன். அப்போது, AE மாயகிருஷ்ணன் அவர்கள் லஞ்சம் கொடுக்காவிட்டால் இப்பிரச்சனையை சரிசெய்ய முடியாது நீங்கள் அலைந்து கொண்டிருக்க வேண்டியதுதான் என்று கோபமாக கூறிவிட்டார். அப்போது உடனிருந்த தியாகராஜன் அவர்களும் AE கூறியதுபோல் ரூ.5,00,000/- யை கொடுத்து விடுங்கள், உங்களுக்கான வேலையை உடனே முடித்து கொடுத்து விடுகிறோம் என்று கூறினார். பின்னர் அங்கிருந்து வந்து எனது தாயாரிடம் தகவல் தெரிவித்தேன். அதற்கு அவர்கள் ரொம்ப பெரிய தொகையாக கேட்கிறார்கள் என்று வருத்தப்பட்டு சொன்னார்கள். எனவே மீண்டும் ஒரு முறை AE மாயகிருஷ்ணன் மற்றும் தியாகராஜன் அவர்களை சந்தித்து பைப் லைன் பதிவதற்கான அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்யும்படி கேட்கச் சொன்னார்கள். அதன்படி கடந்த 27.04.2024-ம் தேதி காலை சுமார் 11.00 மணியளவில், நான் திரு. மாயகிருஷ்ணன் அவர்களை மதுரை பொதுப்பணித்துறை அலுவலக வளாகத்தில் வைகாசி இல்லத்தில் நேரில் சந்தித்தேன். அப்போதும், திரு. தியாகராஜன் உடனிருந்தார். அப்போது திரு.மாயகிருஷ்ணன் அவர்கள் ஏற்கனவே அவர் சொன்னது போல் பணம் ரூ.5,00,000/-த்தை கொண்டு வந்துள்ளீர்களா? என கேட்டார். அப்போது நான் ரொம்ப பெரிய தொகையாக உள்ளது என்று கூறினேன். அதற்கு மாயகிருஷ்ணன் இது ஒன்றும் பெரிய தொகையல்ல, உங்களுக்கு பைப் பதிவற்கான அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு ஆகும் செலவு தான், ஒன்றும் குறைக்க முடியாது, வேண்டுமானால் முன்பணமாக ரூ.1,00,000/-த்தை தாருங்கள். நாங்கள் உங்களுக்கான வேலைகளை செய்கிறோம். மீதிப்பணம் ரூ.4,00,000/-த்தை நாங்கள் உங்களுக்கான அனுமதியை கொடுக்கும் போது வழங்குங்கள் என்று கராராக கூறிவிட்டார். அப்போது உடனிருந்த திரு. தியாகராஜன் AE சொல்வது போல் முன்பணமாக ரூ.1,00,000/-த்தை தாருங்கள். நாங்கள் உங்களுக்கான வேலைகளை செய்கிறோம். மீதிப்பணம் ரூ.4,00,000/-த்தை நாங்கள் உங்களுக்கான அனுமதியை கொடுக்கும் போது வழங்குங்கள் என்றும் கூறினார். மேலும் AE அவர்களும், தியாகராஜன் அவர்களும் தயாரிக்கும் மனு மற்றும்

Site Plan-ல் உங்களது தாயாரிடம் சென்று கையெழுத்து வாங்கி வாருங்கள் என கூறினார். சிறிது நேரத்தில், தியாகராஜன் அவர்கள் ஒரு மனு ஒன்றை தயார் செய்து கொடுத்தார். அதில், அனுப்புனர் முகவரியில் எனது தாயார் பெயர் மற்றும் விலாசம் இருந்தது. பெறுனர் பகுதியில் செயற்பொறியாளர், நீர்வளத்துறை, பெரியாறு வைகை வடிநில கோட்டம், மதுரை எனவும், மேலும், அதில் எங்களது பட்டா நிலத்தில் கால்வாய் உள்ளது என்றும், அதில் 165 மீட்டர் நீளத்திற்கு எங்களது சொந்த செலவில் பைப் பதித்து கொள்வதற்கு அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டு இருந்தது. அத்துடன் அவர் Site Plan-ன் நான்கு பிரதிகள் கொடுத்தார். அதில் 165 மீட்டர் பைப் லைன் செல்வதற்கான படம் போடப்பட்டிருந்தது. அதன் கீழ் Assistant Engineer, W.R.D., Irrigation Section – II, Madurai – 2 எனவும், அதன் அருகில் Assistant Executive Engineer, PWD, W.R.O., Periyar Vaigai Basin Sub Division – I, Madurai எனவும், இருந்தது. நான், அந்த மனு மற்றும் Site Plan-யை பெற்று கொண்டும், மேலும் பணம் சம்மந்தமாக எனது தாயாரிடம் தெரிவிப்பதாகவும் கூறிவிட்டு வந்துவிட்டேன். பின்னர், எனது வீட்டிற்கு வந்து எனது தாயாரிடம் விபரம் கூறினேன். பின்னர், எனது தாயார் அம்மனு மற்றும் Site Plan-களில் கையெழுத்திட்டார். பிறகு, மீண்டும் அன்றைய தினமே திரு. மாயகிருஷ்ணன் அவர்களை அலுவலகம் சென்று அங்கிருந்த மாயகிருஷ்ணனிடம் கொடுத்தேன். அவர் அதனை உடனிருந்த தியாகராஜன் அவர்களிடம் கொடுத்தார். அப்போது, திரு. மாயகிருஷ்ணன் அவர்கள் நாங்கள் அனைத்து ஏற்பாடுகளையும் செய்து விடுகிறோம் முதலில் அதற்காக ரூ.1,00,000/-த்தை 30.04.2024-ம் தேதியன்று எனது அலுவலகம் வந்து காலையில் கொடுங்கள், மீதிப்பணத்தை அனுமதி வழங்கும் போது கொடுங்கள் என்று கூறினார். நானும், சரியென்று கூறி வீட்டிற்கு வந்து எனது அம்மாவிடம் விபரத்தை கூறினேன். எனது தாயார் லஞ்சம் கொடுக்க விருப்பம் இல்லாத காரணத்தினால் என்னிடம் இது சம்பந்தமாக தங்கள் சார்பாக மதுரை லஞ்ச ஒழிப்பு போலீசாரிடம் புகார் அளிக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். அதன் காரணமாக, நான் இந்தபுகார் மனுவை, அவர்கள் சார்பாக, எங்கள் இடத்தில் பைப் பதிய அனுமதி கிடைக்க ஏற்பாடு செய்ய லஞ்சமாக பணம் கேட்கும் திரு.மாயகிருஷ்ணன் மற்றும் திரு.தியாகராஜன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி இந்த புகார் மனுவை கொடுக்கின்றேன். இந்த புகார் மனுவில் எனது தாயாரும் கையொப்பம் செய்துள்ளார். மேலும்,திரு. மாயகிருஷ்ணன் மற்றும் திரு. தியாகராஜன் ஆகியோர்கள் லஞ்சமாக கேட்ட முன்பணம் ரூ.1,00,000/-த்தை கொண்டு வந்துள்ளேன். மேலும் திரு.தியாகராஜன் 04.03.2024-ஆம் தேதியன்று எனது வீட்டிலிருந்து பெற்றுச் சென்ற ஆவணங்களான 1) செட்டில் மெண்டு பத்திர ஆவண எண்.1079/2023-ன் நகல், 2) வில்லங்க சான்றிதழின் நகல், 3) எனது தாய் ஷர்மிளா, பாட்டி அபிதா பேகம், மாமா ரியாஸ் அகமது, சித்தி சபிரா பர்வீன் மற்றும் சித்தி ஷமினா பர்வீன் ஆகிய ஐந்து பேர் பெயர்களில் உள்ள கூட்டுப்பட்டா நகல் அத்துடன் 4) 15.02.2024-ம் தேதியிட்டு எனது பெயரில் அனுப்பிய மனு, (5) 26.03.2024-ம் தேதியிட்டு எனது தாயார் அனுப்பிய மனு மற்றும் (6) எனது தாயார் பெயரில் தியாகராஜன் தயார்

செய்து கொடுத்து அதில் எனது தாயார் கையொப்பம் செய்த மனுவின் நகல் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட எனது தாயார் கையொப்பம் செய்த Site Plan-ன் நகல் ஆகியவற்றை எனது புகார் மனுவுடன் இணைத்துள்ளேன். இப்படிக்கு, (ஒ-ம்) **XXXXX** ShameerK 30/4/2024 (S SHAMEERKASIM) (ஒ-ம்) **XXXXX** SharmilaSiraj 30/4/2024. (SHARMILA SIRAJ)

**Sir, Received the typed complaint on 30.04.2024 at 07.45 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused were also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 03/2024 u/s 7 of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 08.30 hrs and took up investigation. Sd./-XXXXX (N.Bharathipriya) 30.04.2024 Inspector of Police, V&AC, Madurai.**

**Original FIR along with original typed complaint of S.Shameerkasim, S/o.Sirajudeen, Plot No.2, S.E.V. Nagar, Near Thiruppathi Devasthanm, Narayana-puram, Madurai – 14 along with Xerox copies of 1) Settlement Document No.1079/2023, 2) Encumbrance Certificate, 3), Patta in the name of Sharmila, Abitha Begam, Riyaz Ahamed, Sabeera Parveen and Shamina Parveen 4) Petition Dated 15.02.2024 in the name of Shameerkasim, 5) Petition Dated 26.03.2024 in the name of Sharmila Siraj and 6) Petition of Sharmila Sirajudeen addressed to Executive Engineer, Water Resource Department, Periyaru Vagai Basin Division, Madurai along with Site Plan are herewith enclosed and submitted to the Hon'ble Special Judge, Special Court for Trial of cases under Prevention of Corruption Act, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.**

30-4-24

**(N. Bharathipriya)**
**Inspector of Police,**
**Vigilance & Anti-Corruption,**
**Madurai.**